**சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு**

**சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தொழில்நுட்பவியல் சேவையின் ( மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்ப சேவைப் பிரிவு) ஜனபத அதிகாரி பதவிக்கான**

**தரம் III ஆட்சேர்ப்பதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை-2026**

---

சபரகமுவ மாகாண சபையின் அரச சேவையின் தொழிநுட்பவியல் சேவையின் (மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்ப சேவைப் பிரிவு) ஜனபத அதிகாரி பதவிக்கான தரம் III ஆட்சேர்ப்பதற்கான தகுதிபெற்ற சபரகமுவ மாகாணத்தில் வசிக்கும் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி :- **11.06.2026**

03.

3.1 பொதுத் தகைமை :-

(i). விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.

(ii). சிறந்த நடத்தை மற்றும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii). இப்பதவிக்கு விண்ணப்பிக்க எந்த மதகுருவும் தகுதியற்றவர்.

(iv). விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு விண்ணப்பதாரர் சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன் , விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்தர வதிவிடமில்லை எனின், விண்ணப்பதாரியின் துணைவர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல்.

(v). விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 18 வயதிற்கு குறையாத 30 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

(vi). ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு உரிய தகைமைகள் மற்றும் உரிய வயதெல்லை என்பன பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்

(vii). விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு விண்ணப்பதாரிகள் இப் பதவிக்குரிய அனைத்து கல்வி மற்றும் தொழிற் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

(viii). சபரகமுவ மாகாணத்தினுள் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் , பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவிலான உடல் , உள ஆரோக்கியத்தை பெற்றிருக்க வேண்டும்.

3.2 கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்

| கல்வித் தகைமைகள் | | தொழிற்தகைமைகள் |
|---|---|---|
| பதவிக்குரிய கா.பொ.த (சா.த) தகைமைகள் | பதவிக்குரிய கா.பொ.த (உ.த) தகைமைகள் | |
| தாய் மொழி (சிங்களம்/ தமிழ் /ஆங்கிலம் மொழி) கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமை சித்தியுடன் கூடிய ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கா.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | I. கா.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானம் , இரசாயன விஞ்ஞானம் , விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் 02 இல் அல்லது உயிரமைப்பு தொழில்நுட்ப பாடப்பிரிவில் (உயிரியளமைப்பு ,தொழில்நுடபவியல் விஞ்ஞானம் அல்லது விவசாய விஞ்ஞானம் ) ஆகிய மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (பொது பரீட்சை மற்றும் ஆங்கிலம் தவிர்த்து) | I. குண்ணசாலை , அங்குனகொலபெலஸ்ஸ பெல்வெஹெர , பிபில , லபுதுவ வாரியபொல , வவுனியா , அனுராதபுரம் , கரபிங்ச ஆகிய இடங்களில் உள்ள விவசாய கல்லூரியில் விவசாயம் தொடர்பான இரண்டு வருட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. உயர் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும் இரண்டு வருட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>III. மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி விவசாய தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய டிப்ளோமா சான்றிதழ்<br>அல்லது<br>IV. தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் (NVQ 6) ஆறாவது மட்ட தகுதியினைப் பெற்றுக் கொள்ளல்<br>அல்லது<br>V. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் (விவசாய ) டிப்ளோமா பெற்றிருத்தல் |

குறிப்பு – நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 02 ஆகும்

04. **இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்**

I. இலக்கம் 10/2025 மற்றும் 25.03.2025 ஆம் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய ,இந்தப் பதவிகளின் III தரத்திற்கான சம்பள வகுதி MN 3 -2025 மற்றும் மாதாந்த சம்பள அளவு ரூ.52,250/--10x800-11x1190-10x1320-10X1350-ரூ100,040/- ஆகும்.

**05.** III ஆம் தரத்திற்குரிய பதவிகள் நிரந்தரமானது.ஓய்வூதியத்துடன் கூடியது.ஓய்வூதிய முறைப்பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

**06. ஆட்சேர்ப்பு செய்யும் முறை**

**i).** வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருப்பின் எழுத்து மூலமான போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/90 விதிமுறைகளின் படி மாவட்ட மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் தகமைகளின் ஒழுங்கு முறைகளுக்கு அமைய ஆட்சேர்த்தல் நடைபெறும். சித்தியடைவதற்காக ஒரு வினாப்பத்திரத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு 40% ஆகும்.

<u>ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம்</u>

01). உளச்சார்பு பரீட்சை – காலம் 01 மணித்தியாலம் – 100 புள்ளிகள்

விண்ணப்பதாரியின் தர்க்கரீதியான சிந்தனை , முடிவெடுக்கும் திறன் மற்றும் பகுப்பாய்வு செய்யும் திறன் ஆகிய வினாக்களை உள்ளடக்கியது.

02). விடயம் தொடர்பான தொழில்நுட்ப பரீட்சை - காலம் 03 மணித்தியாலம் – 100 புள்ளிகள்

I. இலங்கை காலனித்துவமும் குடியேற்றங்களும்
II. இலங்கை காலனித்துவத்தின் வரலாறு
III. காலனித்துவமும் குடியேற்றங்கள் நிறுவப்படுதலும்
IV. காலனித்துவத்தின் முகாமைத்துவம்
V. அரசாங்க நிலங்களை பகிர்ந்தளிக்கும் முறைகள்
VI. காலனித்துவத்திற்குப் பிந்திய நடவடிக்கைகள்

**07.** இப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமாக நடாத்தப்படும்.கிடைக்கின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நடாத்துகின்ற நகரம் தீர்மானிக்கப்படும். பரீட்சையில் ஆள் அடையாளத்தினை உறுதிபடுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தகுதி அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்பும் போது வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட சம மதிப்பெண்கள் பெற்ற தகுதியான விண்ணப்பதாரிகள் அதிகமாக இருந்தால் , சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு , பொதுச் சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை எண் 01/2024 இன் படி சம மதிப்பெண்களைப் பெற்ற விண்ணப்பதாரிகளிடையே பின்வருமாறு மேலதிகத் தேர்வை நடத்தத் தீர்மானிக்கலாம்.

a. விண்ணப்தாரிகளின் திறனை மதிப்பிடுவதற்கான எழுத்துப் பரீட்சை
b. தகுதி அடிப்படையிலான நேர்க்காணல்

**08.** விண்ணப்பிக்கும் முறை :-

8.1 இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப A-4 அளவிலான கடதாசிகளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தொடரிலக்கம் 01 முதல் 03 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் இல 04 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை தமது கையெழுத்தினாலே நிரப்புதல் வேண்டும்.மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.2 இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்தவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற அடிப்படையில் சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு உரிய திகதிக்கு முன்னரோ அன்றோ விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து , நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்திய அனைத்து விண்ணப்பதாரிகளையும் போட்டிப் பரீட்சையில் கலந்துகொள்ள அனுமதிக்கும் .போட்டிப் பரீட்சையில் அமர்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது , விண்ணப்பதாரர் அந்த பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஒப்புதலாக கருதப்படமாட்டாது.விண்ணப்பதாரர் பரீட்சை தொடங்கும் நாளன்று தனது கையொப்பம் சான்றளிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

8.3 பரீட்சைக் கட்டணம் ரூ.600/- ஆகும்.இப் பரீட்சைக் கட்டணத்தை சபரகமுவ மாகாண சபையின் **20.03.02.99** என்ற வருமானத் தலைப்பிற்கு வரவாகுமாறு சபரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சபரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்) செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அலுவலகங்களுக்கு (தபால் அலுவலகம் , வங்கி ) பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.4 சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 11.06.2026 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் / விரைவுத் தபாலில் "செயலாளர் , சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு , மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி , புதிய நகரம் , இரத்தினபுரி " என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"சபரகமுவ மாகாண தொழில்நுட்ப சேவையின் ஜனபத அதிகாரி தரம் III ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026 "** எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் , பதவிக்குரிய தகமைகளை பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

8.5 விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலுக்கேற்ப தகமைகள் உள்ளதா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் போதுமான தகமைகள் இல்லை என அறியப்படின் , அவரது அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும். இவ் விண்ணப்ப அறிவித்தலில் அடங்காத ஏனைய விடயங்கள் இருப்பின் அவை தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும். அத்துடன் இவ்வாட்சேர்ப்பு அறிவித்தலின் வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிராகரித்தல் தொடர்பான இறுதித் தீர்மானமும் இவ் ஆணைக்குழுவுக்குரியது.

டபிள்யு.ஆர்.தினீஷா எஸ் ரத்னாயக
செயலாளர்
சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
சபரகமுவ மாகாணம்
05.2026